(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

இரட்டை ஏடு சுருட்டின் மீது மத்திய அரசு விதித்த கலால் வரியின் விளைவாக, கைத்தொழில் சுருட்டு கிட்டங்கிகள் மூடப்பட்டதும், தொழிலாளர் வேலை நீக்கமும், அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சமீபத்தில் இரட்டை ஏடு சுருட்டின் மீது மத்திய அரசு சுமத்திய 100 சதம் கலால் வரியின் காரணமாக திருச்சி மாவட்டம் ; திண்டுக்கல் உள்ளிட்ட, தமிழகம் முழுவதும் எல்லா கைத்தொழில் சுருட்டு கிட்டங்கு களும் மூடியதின் விளைவாக ஏராளமான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு உள்ளதின் விளைவாக ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. ஆர். உமாநாத் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள்.

இது எப்படி அவசர முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : அவைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய இரட்டை ஏடு சுருட்டு தெளிவாக சொல்லியிருக்கிறீர்கள், ஒத்தை சுருட்டு, அதை தெளிவுபட சொல்லியிருக்கிறீர்கள். 40 ஆண்டுகளாக மேற்படி தொழிலாளர்கள் இதிலே ஏராளமாக இருக்கிறார்கள். குறிப்பாக திருச்சி, திண்டுக்கல் போன்ற இடங்களிலும், அதற்காக பெட்டிகளைத் தயாரிக்கும் தொழிலாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு டிப்பன்டன்டாக இருக்கிறார்கள். உறையூர் ரெட்டை ஏடு சுருட்டுக்கு எக்ஸ்போர்ட்டுக்கு பேமசாக இருக்கிறது. முன்னாலே எக்சைஸ் டூட்டி போட்டதனாலே பல சிறிய தொழிற்சாலைகள் அன்று மூடப்பட்டு நலிந்த நிலைமையில் இருக்கின்றன. Chanda Committee Central Excise Reorganisation Committee, 1963 போன்ற கமிட்டிகள் சிபாரிசு செய்ததன் பேரிலே வரிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்த நலிந்த தொழிற்சாலைகள் தொடர்ந்து இருந்தன. இப்போது மீண்டும் திடீரென்று இந்த பட்ஜெட்டில் மத்திய அரசு போட்டிருக்கிற வரி, 100 சுருட்டுகளின் விலை 15 ரூபாய், அந்த சுருட்டுக்குப் போட்டிருக்கிற வரியும் 15 ரூபாய் என்று போட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சுருட்டின் விலை 15-லிருந்து 30 ரூபாயாகிறது. சிறு தொழிற்சாலைகள் இன்றைக்கு மூடப்படுகிற நிலைமை, தொழிலாளர்கள் வெளியேற்றப்படுகிற நிலைமை இருக்கிறது. இதனால் புகையிலை டிமான்டும் குறையும். ஏற்கனவே இந்தப் புகையிலையின் விலை குறைச்சலாக இருக்கிறது. அவர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

ஆகவே, மின்சார வரி போடுகிறபோது மாநிலத்தைப் பாதிக்கிறது என்று நமது மாநில அரசு எப்படித் தமிழகத்தைப் பாதிக்கிறது என்று பரிந்துரை செய்ததோ அதே நிலையில் நமது மாநில அரசு, தொழிலாளர்களைப் பாதிக்கிறது என்று சொல்லி, இந்த வரியை நீக்கவேண்டும் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டும்.

எவ்வளவோ சிறு விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டும். பரிந்துரை செய்வதற்கு இன்னும் நேரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்து, அதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் சுருட்டு சுற்றும் நிறுவனங்கள் சுமார் 220 இருக்கின்றன. இவற்றில் சுமார் 2,052 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவற்றின் விவரங்கள் பின்வருமாறு:

	தொழில் நிறுவனங்கள் எண்ணிக்கை.	தொழிலாளர்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
திருச்சி	41	600
சேலம்	48	291
திருநெல்வேலி	5	23
தஞ்சாவூர்	92	668
தென்னாற்காடு	15	107
வடார்க்காடு	9	64
மதுரை	10	299

ஆக, 220 தொழில் நிறுவனங்களில், 2,052 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் 11 நிறுவனங்களில் இரட்டை ஏடு சுருட்டு சுற்றும் தொழில் நடைபெற்று வருகின்றது. இத் தொழிலில் 100 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். மீதியுள்ள 30 நிறுவனங்களில் ஒற்றை ஏடு சுருட்டு சுற்றும் தொழில் நடைபெறுகின்றது. இதில் 500 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த நிறுவனங்களில் ஒன்று கூட இதுவரை மூடப்படவில்லை.

1978 மார்ச் 18] [திரு. எஸ். இராகவானந்தம்]

மத்திய அரசு விதித்துள்ள கூடுதல் கலால் வரிக்கு ஆட்சேபம் தெரிவிப்பதற்காக 20-3-78 அன்று ஒரு நாள் மட்டும் உற்பத்தியை நிறுத்துவது என்று 13-3-78 அன்று தமிழ்நாடு புகையிலை வியாபாரிகள் சங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி உள்ளது.

திண்டுக்கல்லில் 299 தொழிலாளர்களைக் கொண்ட சுருட்டு சுற்றும் நிறுவனங்கள் 10 உள்ளன. இவற்றில் பகவதி விலாஸ் சுருட்டுத் தொழிற்சாலை தவிர ஏனைய நிறுவனங்கள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. பகவதி விலாஸ் சுருட்டுத் தொழிற்சாலையில் உற்பத்திச் செலவு பாதிக்கப்பட்டு விட்டது என்ற பொருளாதாரக் காரணத்தால் 150 தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. இவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களோ அல்லது அவர்களது சங்கமோ தொழிற் தகராறு எதையும் எழுப்பவில்லை.

எனவே, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர்.........

திரு. எம். ஏ. லத்தீப் : சார், ஒரு ஒழுங்குப் பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ஒழுங்குப் பிரச்னை கிளப்பக் கூடாது. நான் அமைச்சர் அவர்களை அழைத்து விட்டேன். நீங்கள் நினைக்கிறபோது எல்லாம் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முடியாது. டிமான்ட் மூவ் செய்த பிறகு எழுப்பலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்புகிறேன். எப்போது வேண்டுமானாலும் எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போது வேண்டுமானாலும் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முடியாது. மானியக் கோரிக்கைகளை அமைச்சர் மூவ் செய்த பிறகு எழுப்பலாம். உட்காருங்கள்.